**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 305/2011**
திரு. மகேஷ்வரன் (D.W –4) **12.01.2026.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்க விசாரணை செய்யவில்லை. சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். தாவாச்சொத்து பாகப்பிரிவினை மற்றும் பிதுராஜ்ஜியப்படி ராமாத்தாளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. தாவாச்சொத்துக்களை பொறுத்து ராமாத்தாள் மற்றும் அவருடைய மகள்கள் சுப்பையா கவுண்டருக்கு விடுதலை ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் 1980 ஆம் வருடத்திற்கு முன்பு உள்ள ஆவண விவரங்கள் எனக்குத் தெரியாது. விடுதலை ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. நான் கிரையம் பெற்ற சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்த முன் உரிமையாளர் பழனிகவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் வாதிகளின் மகள்களுக்கு உள்ள உரிமையை பொறுத்து பழனி கவுண்டர் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது, செல்லாது என்றால் சரியல்ல.

பழனிகவுண்டர் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்களான கருணையம்மாள், ராமசாமிகவுண்டர், சுப்ரமணியம், துரைசாமி, வள்ளியம்மாள், கோவிந்தம்மாள் ஆகியோர் சேர்ந்து குமரன் அண்ட் கோ பங்குதாரர்களுக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் வாதிகளின் பாகத்தை பொறுத்து சொல்லாது என்றால் சரியல்ல. குமரன் அண்ட் கோ–வில் இரண்டு பங்குதாரர்கள் பழனிச்சாமிக்கு தாவாச்சொத்தை பொறுத்து ஏற்படுத்தி கொடுத்த விடுதலை ஆவணம் செல்லாது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பழனிச்சாமி 18.09.1989 ஆம் வருடம் க.ச.எண். 89/2 சொத்தை பொறுத்து ஏற்படுத்திய

கிரைய ஆவணமும் வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லாது, கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

என்னுடைய தகப்பனார் கிரையத்தின் படி தாவாச்சொத்தில் ஏற்பட்டுள்ள உரிமை செல்லாது என்பதால் அவருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசுகளான 7 முதல் 10 மற்றும் 12, 22 முதல் 24 பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தில் வாதிகளின் பாகத்தை பொறுத்து எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் வாதியும், முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள். அவர்களுக்கு தலா 1/3 கீழ் பங்கு தாவாச்சொத்தில் உரிமை உள்ளது என்றால் தவறு. தாவாச்சொத்து 2 கோடிக்கு மேல் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவாவிற்காக தாவாச்சொத்தின் மதிப்பு 2 கோடிக்கு மேல் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வாதிகள் கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(இதே குறுக்கு விசாரணையை 18 முதல் 21 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்)**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.12 12:38:14 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.